## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

நாள் 14.11.2025

அசல் வழக்கு எண். 28/2010

வா.சா.1– கதிரவன், த/பெ.பெரியசாமி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் அறக்கட்டளை சார்பாக வருகிறீர்களா அல்லது ஆதிகேசவ பெருமாள் கோயிலுக்காக வருகிறீர்களா என்றால் இரண்டிற்கும் தான் வருகிறேன் அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் செய்துள்ளேன் நீங்கள் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. கடந்த 05.11.1913 பத்திரம் முன்னிலைக்கு கோயிலுக்கு வந்ததாக சொல்கிறீர்கள் அந்த ஆவணம் நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நீங்கள் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட முதல் ஆவணம் மடத்திற்கு தான் கொடுத்துள்ளார்கள் கோயிலுக்கு கொடுக்கவில்லை என்றால் சரியில்லை. இந்த வழக்கில் முதல் பிரதிவாதி எந்த பதிலும் தாக்கல் செய்யவில்லை என்கிற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. இரண்டாம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பின் விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணம் இந்த வழக்கில் மூன்றாவது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அக்ரீமெண்டில் ராமானுஜர் அறக்கட்டளைக்கு சொந்தமானது என்று போடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வாடகை அறக்கட்டளைக்கு சேர வேண்டியது என்று போடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. கோயிலுக்கு சொந்தமானது என்று விளம்புகை கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை

என்றால் சரியல்ல அது கோவில் உடன் இணைந்த கட்டளை ஆகும் விளம்புகை பரிகாரம் கோரவில்லை. முதல் பிரதிவாதி வாடகைக்கு உள்ளார் என்று சொல்கிறீர்கள் அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தற்போது அந்த இடத்தை அனுபவித்து வருபவர் வாடகை தொகை செலுத்த வேண்டும் என்கிற அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சொத்து சர்வே எண் தெரியுமா என்றால் 46 பி ஆகும். அது சர்வே எண் கிடையாது கதவு எண் என்றால் சரியில்லை. எவ்வளவு பரப்பளவு என்றால் 800 சதுர அடியாகும். நான்கு புற எல்லைகள் தெரியுமா என்றால் சொல்லப்பட்டுள்ளது எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தை நீங்கள் பார்த்தீர்களா என்றால் பார்த்துள்ளேன். பிரபல கட்டளைக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான் ஆதிகேச பெருமாளுக்கு வாடகை செலுத்த வேண்டுமென அறிவிப்பு கொடுத்தீர்களா என்றால் கொடுத்துள்ளேன் அதை நீங்கள் வழக்கில் தாக்கல் செய்தீர்களா என்றால் செய்துள்ளேன். மேற்படி சொத்து உங்களுக்கு சொந்தமானது இல்லை என்றால் சரியில்லை. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram